ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய: ஸ்ரீமத் வரவரமுநயே நம:
ஸ்ரீவாதி பீகர மஹாகுரவே நம:

திருநாங்கூர் ஸ்ரீ உ.வே ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்வாமி,
(வைகுந்தவிண்ணகரம் ப்ரதிவாதி பயங்கரம் திருமாளிகை)
அருளிச்செய்த

# ஸ்ரீப்ரவாதி பயங்கரமண்ணா வைபவம்



ஸ்ரீவைகுந்தநாதப் பெருமாள் - திருநாங்கூர்
புகைப்பட உதவி : ஸ்ரீ.P.B.பத்ரிநாராயணன் ராமானுஜன்



ஸ்ரீ அண்ணா, திருநாங்கூர்
புகைப்பட உதவி - ஸ்ரீ S கல்யாணரெங்கன், திருநகரி

மாயிமதங்கஜமஸ்தக கோடீபாடநபாடலபாணிதலோய:
ச்ருத்யடவீகுஹரேஷ்ஷஸமிந்தே ஸப்ரதிவாதி பயங்காஸிம்ஹ:/

அகவிம்கலயந் அபடும் படுயந் அபுதம்புதயன் அகுரும்குருயத்
பரவாதி பயங்கர பாதரஜ: பரமாணுபராக்ரம உல்வஸதி: //

ஸ்ரீய:பதியான ஸர்வேச்வரன் தனது ஸர்வேச்வரத்வத்துக்கனுகுணமாக, ஸம்ஸாரிகளது நோவுபாட்டைக் கண்டு மிக வருந்தித் தனதின்னருளால் ஸம்ஸாரிகளுக்குத் தன்னைத் தொழுப்படியான சரிரத்தையும், தொழும் வகையை விவரிக்கும் சாஸ்திரங்களையும் முதன் முதலாக உண்டாக்கித்தந்தான். மேலும் தானே பல அவதாரங்களைடுத்து, அவ்வனுஷ்டானங்களை அனுஷ்டித்தும், அனுஷ்டிப்பித்தும் போந்தான். அதிலும் குறைவுபாட்டைக் கண்டு ஸேனைமுதலியார், ஆழ்வார், ஆசார்யர்களையும் அவதரிப்பித்தும், தானும் பின்னானார் வணங்குஞ் சோதியாய்க் கோயில் முதலான நூற்றெட்டு திவ்ய தேசங்கள்தோறும் அர்ச்சாருபியாய் எழுந்தருளி ஸம்ஸாரிகளான நம்மைத் துன்பம் மாற்றி இன்பமுறுமாறு செய்து கொண்டிருக்கிறான்.

ஸ்ரீசேஷாம்சரான எம்பெருமானார் மணவாள மாமுனிகளாய் அவதரித்தபோது தேவப்பெருமாள் அம்சரான கூரத்தாழ்வான் ப்ரதிவாதி பயங்கரமண்ணவாக அவதரித்தார் என்று பெரியோர் புகழ்ந்து பேசுமாறு துப்புல் அக்ரஹாரத்தில் எழுந்தருளியிருந்த வாத்ஸ்ய முடும்பை அனந்தாசாரியாருக்கும் அவர் தேவிகள் ஆண்டாளுக்கும் திருக்குமாரராய் கலி 4463 பிலவ வருஷம் ஆடி மாதம் கிருஷ்ண சதுர்தசி வியாழக்கிழமை புஷ்ய நசஷத்திரம் கூடின சுப முகூர்த்தத்தில் அண்ணா அவதரித்தார். பெற்றோர் மனமுவந்து ஜாதகர்மம் முதலான ஸம்ஸ்காரங்கள் அனைத்தையும் சாஸ்த்த்ரப்படி நடத்தினர். `ஹஸ்திகிரிநாதர் அண்ணா' என்று திருநாமம் சாற்றி உசித காலத்தில் உபநயனமும், பஞ்ச ஸம்ஸ்காரமும் செய்தருளினர். அண்ணாவின் திருவவதாரத்தனியன்.

கல்யப்தேலநபாவநே ப்லவ சரத்யர்க்கே கதே கர்க்கடம்
பசேஷிSந்த்யே குருவாஸரே கலிதிதௌ ருசேஷ ஸூராணாம் குரோ: /

ஸ்ரீவத்ஸாந்வயஸிந்துசீதகிரண: ஸ்ருத்யந்த கூடார்த்தத:
காஞ்ச்யாமாவிரபூத்தயாதிமஹித:ஸ்ரீவாதிபீக்ருத்குரு://

பகாவந்நியமனத்தினால் குமாரவேதாந்தாத்சாரியர் என்னும் நயனாராசாரியார் ஹஸ்திகிரிநாதரண்ணாவை விசேஷ கடாசஷம் செய்தருளி ஸ்ரீபாஷ்யச்ருத ப்ரகாசிகாதி வேதாந்த கிரந்தங்களைப் பரிபூர்ணமாகக் கற்பித்தருளினார்.

நயனாராசாரியார் வயோதிகராய் வாதப்போருக்கு அசக்தராய் இருக்கும் நாளில் நிருஸிம்ஹமிச்ரன் என்னும் மாயாவாதியை ஆசாரியான் அனுக்ரகத்தாலே எதிர்சென்று வாதப்போரில் ஜயித்து வந்தார் ஹஸ்திகிரிநாதரண்ணா. நயனாராசாரியார் ஹஸ்திகிரிநாதரண்ணாவை வாரீர் `ப்ரதிவாதி பயங்கரரே' என்று வரவழைத்து ஆலிங்கனஞ் செய்து ஞானபுத்திராக அபிமானித்தபடியால், அது முதல் `ப்ரதிவாதி பயங்கரமண்ணா' என்கிற பெயர் ப்ரஸத்தமாயிற்று. ந்ருஸிம்ஹமிச்ரனும் அண்ணாவின் திருவடிகளிலாச்ரயித்து `ஹயக்ரீவ வரததாஸர்' என்னும் தாஸ்ய நாமம் பெற்று, அண்ணாவிஷயமாக கீழ்கண்ட தனியன் அருளிச்செய்தார்.

அதந்தார்பாத்மஜம் வாத்ஸ்யம் தத்பாதாப்ஜமது வ்ரதம் /
வந்தே ஹஸ்த்யத்ரி நாதார்யம் வரதார்பாத்த பாஷ்யகம் //

அண்ணா பெருந்தேவியார் என்னும் தன் தேவியாருடன் காஞ்சியில் வரதனுக்குச் சாலைக்கிணற்றுத் தீர்த்தம் கொண்டு வருதல் முதலான கைங்கர்யங்களைச் செய்துவரும் நாளில் மூன்று குமாரர்கள் அவதரித்தனர்.

ஆந்திர தேசத்தில் மண்டலாதிபதியான வீரநரசிம்மராயன் என்பவன் அண்ணாவின் வைபவத்தில் ஈடுபட்டு அண்ணாவை ஆசாரியனாக ஆச்ரயித்தான். பிறகு சிலநாள் திருமலையில் திருவேங்கடமுடையானுக்கு ஆகாச கங்கையினின்றும் திருமஞ்சனம் எடுத்துவந்து கைங்கரியம் செய்துவரும் நாளில், ஒருநாள் கோயிலில் நின்றும் (ஸ்ரீரங்கத்திலிருந்து) எழுந்தருளின ஸ்ரீவைஷ்ணவர் மூலமாக ஸ்ரீமணவாள மாமுனிகள் வைபவங்கேட்டு, அவரை சேவிக்க விருப்பமுடன் எழுந்தருளியிருந்தார்.

ஸ்ரீமணவாள மாமுனிகளும் பரபக்ஷ ப்ரதிக்ஷேபம் சேய்து (வேற்று மதத்தை நிரஸித்து) ஸ்வபக்ஷ ஸ்தாபனம் (தன்மதம் நிலைநிறுத்தல்) செய்ய வல்லவரான ப்ரதிவாதி பயங்கர மண்ணாவைக் கோயிலிலே தம்மருகில் நித்தியவாஸ ரஸிகராயிருக்கச் செய்ய வேண்டும் என்று நினைத்து, ஸ்ரீவைஷ்ணவர் ஒருவரை அண்ணாவை அழைத்துவர அனுப்ப, அண்ணாவும் மாமுனிகளை ஸேவிக்க விருப்பத்துடன் கோயிலுக்கு எழுந்தருளினார். பகவத் விஷயத்தில் `ஒன்றும் தேவும்' என்னும் திருவாய் மொழி (4ஆம் பத்து 10ஆம் திருவாய்மொழி) ப்ரவேச காலக்ஷேப ஸமயத்தில் அண்ணா மாமுனிகள் ஸமீபம் எழுந்தருள, மணவாளமாமுனிகள் காலக்ஷேபத்தை நிறுத்தி `நீர் ப்ரதிவாதி பயங்கரரன்றோ, காலக்ஷேபத்தில் பிழைகாணில் என்னாவது?' என்று முறுவல் செய்த வண்ணமே யருளிச் செய்ய, அண்ணாவும் `பரகோஷ்டியில் ப்ரதிவாதி பயங்கரனாகிலும், ஸ்ரீவைஷ்ணவ கோஷ்டியில் அவர்களுக்குத் தாஸன் அடியேன்' என்று விண்ணப்பம் செய்ய, அதுமுதல் அண்ணாவுக்கும் அவரை ஆச்ரயித்தவருக்கும் `ஸ்ரீவைஷ்ணவ தாஸன்' என்ற தாஸ்ய நாமம் நிலைநின்றதாயிற்று. மறுபடியும் அண்ணா மணவாள மாமுனிகளின் அவதார வைலக்ஷண்யத்தில் ஈடுபட்டு நம்பெருமாள் நியமனமும் பெற்று ஸகுடும்பராய் மாமுனிகளிடம் பஞ்ச ஸம்ஸ்காரம் பெற்று சரமபர்வமான ஆசாரிய நிஷ்டையில் நிலைநின்று எழுந்தருளியிருந்தார்.

பின்பு மணவாளமாமுனிகள் அண்ணாவை ஸ்ரீபாஷ்ய சிம்ஹாஸனத்திலமர்த்தி கந்தாடையண்ணன், ஜீயர் நாயனார் முதலானோர்க்கு ஸ்ரீபாஷ்ய காலக்ஷேபமம் ஸாதித்தருளும்படி நியமித்தார். அப்பொழுது தனியன் அநுஸந்திப்பதற்காக மாமுனிகள் வேதாந்த தேசிக கடாக்ஷவிவ்ருத்த போதம் என்று தொடங்க, அண்ணா காந்தோபயந்த்ரு யமிந: கருணைக பாத்திரம் என்று அநுஸந்திக்க, அங்குள்ளார் வத்ஸாந்வ வாய மநவத் யகுணைருபேதம் பக்த்யா பஜாமி பரவாதி பயங்கரார்யம் என்று முடிக்க, இத்தனியனை ஸ்ரீபாஷ்ய காலக்ஷேப ஆத்யந்தங்களில் (ஆரம்பத்திலும் முடிவிலும்) அநுஸந்தியங்கள் என்று நியமித்தருளினார். பியகு அண்ணாவிற்கு அத்தனியனே ப்ரஸத்தமாயிற்று. மேலும் தமது திருவாராதனத்திலுள்ள `வீதியார வருவான்' என்னும் சதுர்புஜ வேனுகோபாலனை அண்ணாவுக்குத் திருவாராதனார்த்தமாகத் தந்தருளினார்.

பின்பு ஒரு சமயம் அண்ணா ஒரு புரட்டாசித் திருநாளன்று திருமலையில் ஸர்வக்ஞமிச்ரனுடன் வாதஞ்செய்து வெற்றி கொண்டு திருவேங்கடமுடையான் அநுக்ரஹமாக இரண்டு சாமரம் முதலான பரிசு பெற்றார். நூற்றெட்டுத் திருப்பதி எம்பெருமான் விஷயமான ஸுப்ரபாதம் ப்ரபத்தி மங்களம் முதலான கிரந்தங்கள் அருளிச்செய்து ஸ்ரீவிசிஷ்டாத்வைத ஸுத்த ஸத்ஸம் பிரதாயம் மேன்மேலும் தழைத்தோங்க தர்சன சிர்வாஹம் செய்து கொண்டு தொண்ணூற்றிரண்டு திருநக்ஷத்திரங்கள் இவ்விபூதியில் எழுந்தருளியிருந்து கலி 4556 ஸ்ரீமுக வருஷம் பங்குனி மாதம் சுக்லபக்ஷம் நவமி திதி புதன்கிழமை புஷ்ய நக்ஷத்ரம் கூடிய தினத்தில் பெரிய ஜீயர் என்று பிரஸித்தரான ஸ்ரீமணவாள மாமுனிகள் திருவடிகளைத் தியானித்துக்கொண்டு திருநாட்டுக் கெழுந்தருளினார்.

அண்ணாவின் சரமத்தனியன்

அப்தே ஸ்ரீமுக நாமகே தினமணௌமீனம் கதேபாண்டரே
பக்ஷே புஷ்யப ஸம்யுதேவஸு திதௌ தாரேயவாராந்விதே /
ஸ்ரீமான் வத்ஸ குலாம்பு தீந்துரநக: ஸ்வாசார்ய தத்தாத்மதீ:
ஸ்ரீவைகுண்ட மகாத குண்ட விபவ: ஸ்ரீவாதி பீக்ருத்குரு: //

பிறகு தன்னடியார்களிடமுள்ள பேரருளினால் ஸ்ரீரங்கம், ஸ்ரீபெரும்புதூர், காஞ்சீபுரம், திருநாங்கூர், திருநாராயணபுரம், திருப்பதி, விச்சந்தாங்கல் முதலான திவ்விய தேசங்களில் அர்ச்சாருபியாய் எழுந்தருளி இப்பொழுதும் அண்ணா சேவை சாதித்து வருகின்றார்.

மங்களம் குருவர்யாய மங்களம் குணஸிந்தவே /
ஸ்ரீவாதி பீகரார்யாய நித்ய ஸ்ரீர்நித்ய மங்களம் //

ஸ்ரீப்ரதிவாதி பயங்கரமண்ணா திருவடிகளே சரணம்.

வாசிக தோஷ: க்ஷந்தவ்ய: